அசல் வழக்கு எண். 281 / 2018 - பி.வா.சா.1. பெயர் - கே. ரவிச்சந்திரன்

நாள் - 20.01.2020.

## முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. நான் சத்தியப்பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். கடந்த, 02.05.2008 இல் என் தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் பி.சா.ஆ.1. 29.02.2008 இல் என் தகப்பனாரும் மற்றும் 5 நபர்களும் சேர்ந்து ஒரு ராதாகிருஷ்ணன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தின் பதிவு நகல் பி.சா.ஆ.2. அ.வ.எண். 725/2009 இல் இந்த வழக்கின் வாதி அந்த வழக்கை தாவாப்படி தீர்ப்பு செய்துகொள்ளலாம் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குறிப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. அதில் என் சகோதரி சுமதி தாவாப்படி தீர்ப்பு வழங்கும்படி செய்த குறிப்பாணையின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4. பி.சா.ஆ.1 ப்படி என் பெயரில் வழங்கப்பட்டாக்கள் பி.சா.ஆ.5 முதல் 9. ஆகவே, தாவா தள்ளுபடியாக வேண்டுமென்று வேண்டுகிறேன். என் எதிர்கோரிக்கைப்படி எனக்கு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆவணங்கள் வாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டன.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு, அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து அதை சரியயென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார் / கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல் மாவட்ட நிதிபதி,
மதுரை.